# THE TELEFLEX
# ADVANTAGE



மக்களுடைய வாழ்வின் ஆரோக்கியத்தையும் தரத்தையும் மேம்படுத்துகிறது

Teleflex

# THE TELEFLEX
# ADVANTAGE



## பென்சன் ஸ்மித்தின் தலைவர், தலைவர்

இந்த வீடியோவை பார்ப்பதில் உங்களுக்கு சிரமம் இருந்தால், தயவுசெய்து இந்த இணைப்பிற்கு செல்லவும்: https://vimeo.com/248216765/03cc783ef0

## மக்களுடைய வாழ்வின் ஆரோக்கியத்தையும் தரத்தையும் மேம்படுத்தும் சிறப்புவாய்ந்த மருத்துவக் கருவிகளை உலகளவில் வழங்கும் நிறுவனம் டெலிஃப்லெக்ஸ் ஆகும்.

நாங்கள் குறிக்கோளால் உந்தப்பட்ட புதுமைகளை செயல்படுத்துகிறோம். நோயாளிகளுக்கும், வழங்குநர்களுக்கும், சமுதாயத்திற்கும் பயனளிக்கும் வகையில்பூர்த்தி செய்யப்படாத மருத்துவ தேவைகளை இடைவிடாமல் அடையாளம் கண்டு கொள்கிறோம். நாங்கள் மாற்றத்தை உருவாக்குகின்ற ஒரு வளர்ந்து வரும் நிறுவனமாகும்.

நாம் குறிக்கோளைக் குறித்த ஒரு பொதுவான உணர்வினாலும், பகிரப்பட்ட பண்புகளாலும் இணைக்கப்பட்டு இருக்கிறோம். நமது பணியாளர்கள் தினந்தோறும் செய்யும் செயல்கள் மற்ற மக்களுடைய வாழ்விலே தாக்கத்தை ஏற்படுத்துகின்றது என்பதை புரிந்து கொண்டு இடம், நிலை, அல்லது பேசப்படும் மொழி ஆகிய பாகுபாடுகள் இல்லாமல் சேர்ந்து இருக்கிறார்கள்.

வளர்ச்சி, கலாச்சாரம், மக்கள் மற்றும் தொழில்வாழ்க்கை போன்றவையே தி டெலிஃப்லெக்ஸின் அனுகூலம் (The Teleflex Advantage)

THE TELEFLEX
# ADVANTAGE

பக்கம் 3 செல்

## *வளர்ச்சியே* எங்கள் மரபு

- செயல்மிகு உலக மருத்துவத் தொழில்துறை
- மருத்துவர்களால் அறிந்து நம்புகின்ற மகத்தான பிராண்டுகள்

பக்கம் 6 செல்

## *கலாச்சாரம்* பகிரப்பட்ட தொலைநோக்குப் பார்வை, மதிப்பீடுகள் மூலமாக செழிக்கிறது

- மக்களுடைய வாழ்வின் தரத்தை மேம்படுத்துதல்
- நம்பிக்கையும், தொழில்முனைவோருக்கான உணர்வையும் குதூகலத்தையும் மேற்கொள்தல்

பக்கம் 9 செல்

## *மக்களே* நாங்கள் செய்யும் அனைத்திலும் மையமாக இருக்கிறார்கள்

- திறமையான சகபணியாளர்கள் உயர்ந்தமேன்மைக்காக அர்ப்பணித்துக்கொண்டவர்கள்
- மருத்துவர்களும் மற்றும் அவர்கள் சேவை செய்கின்ற நோயாளிகளின் நம்பகமான கூட்டாளிகள்.

பக்கம் 11 செல்

## *தொழில் வாழ்க்கையில்* டெலிஃப்லெக்சில் வெகுதூரம் செல்ல முடியும்

- ஆர்வமூட்டும் மற்றும் சவாலான பணியின் மூலம் நீங்கள் மாற்றதை ஏற்படுத்தக்கூடும்
- வளரவும் மேன்மையடையவும் வாய்ப்புகள்

# வளர்ச்சியே எங்கள் மரபு





*”நம் வாடிக்கையாளர்களின் தொழில்பண்புடைய கரங்களில் நம்முடைய தயாரிப்புகள் நோயாளிகளின் சுகாதார பராமரிப்பை பொருத்தவரை மெய்யாகவெ மாற்றத்தை ஏற்படுத்துகின்றன என்பதை நான் நீண்ட காலத்திற்கு முன்பாகவே உணர்ந்துகொண்டேன். டெலிஃப்லெக்ஸ் தயாரிப்புகள் தினந்தோறும் ஆயிரக்கணக்கான உயிர்களைக் காக்க உதவுகின்றன, அது மிகவும் பயனளிக்கிறது”* - *என்ரிக்வி கிரேண்டே, ஸ்பெயின்*

# வளர்ச்சியே எங்கள் மரபு

## நாங்கள் யார்

**எழுபது ஆண்டுகளுக்கு முன்பாக ஒரு** எளிமையான பொருளுடன் - - ஒரு மல்டி-ஸ்ட்ரேண்ட் ஹெலிக்கல் கேபில் மற்றும் தள்ளுதல்-இழுத்தல் அசைவுகளை சுழற்சி அசைவுகளாக மாற்றும் ஒரு கியர் - டெலிஃப்லெக்ஸ் தொடங்கப்பட்டது.

வரலாறுரீதியாக மருத்துவம், வான்வெளி மற்றும் தொழிற்துறை சந்தைகள் என உலகளாவிய செயல்பாடுகள் கொண்ட ஒரு பல்வகைப்படுத்தப்பட்ட நிறுவனம், கடந்த இருபது ஆண்டுகளில் நாங்கள் எங்கள் துறையை முழுவதுமாக மருத்துவ தொழில்நுட்ப நிறுவனமாக மாற்றிவிட்டோம்.

கையகப்படுத்தல் மூலம் எங்கள் வர்த்தகம் வளர்ந்துள்ளது தொடர்ச்சியான தொழில்முனைவோருக்கான உணர்வும்,எங்கள் வெற்றிக்கு உந்துதலாக உள்ள கூட்டுறவும் அந்த நிறுவன்ங்களின் சிறந்த பணியாளர்கள் மற்றும் கருத்துக்களின் மீது பிரதிபலிப்பதாக இருந்தது.



Teleflex original push-pull cable



Global Operations facility in Kulim, Malaysia

# வளர்ச்சியே எங்கள் மரபு



## இன்றைய டெலிஃப்லெக்ஸ்

- நிலைநாட்டப்பட்ட உலக பிராண்டுகளுடன் சந்தையில் முன்னணி நிலை.
- வளர்ந்துவரும் உலக சுகாதாரபராமரிப்பு சந்தைகளை சாதகமாக பயன்படுத்தி நன்கு நிலைபடுத்தப்பட்டு இருக்கிறது
- நிறுவன தலைமையகம்: வேய்ன், பென்சில்வேனியா
- உலகெங்கும் 11,000 பேருக்கு மேல்
- 70 -கும் மேட்பட்ட மற்றும் தயாரிப்பு வசதிகளைக் கொண்டிருக்கிறது
- 150 நாடுகளில் சுகாதாரபராமரிப்பு வழங்குபவர்களை ஆதரிக்கிறது

## கலாச்சாரம் பகிரப்பட்ட தொலைநோக்குப் பார்வை, மதிப்பீடுகள் மூலமாக செழிக்கிறது



Teleflex Global Operations facility in Salt Lake City, UT:
From Left: Zung Bui, Phuong Cao, Lucy Dinh



*”நாங்கள் செய்யும் காரியங்களில் தொழில்முனைவோருக்கான உணர்வு பதிந்துள்ளது. எங்கள் பிராண்டுகளை நிருவிய மருத்துவர்கள் 100 ஆண்டுகளாக நிலைத்திருக்கும் பொருட்களை உருவாக்கியிருக்கிறார்கள் - அவர்களிடம் அந்த தொழில்முனைவோருக்கான உணர்வு இருந்தது.”*

*- ஜோர்ஜ் பெரேஸ், யுஎஸ்எ*



*“இத்தாலியில் இருக்கும் எங்கள் அணி விற்பனை, லாஜிஸ்டிக்ஸ், தர உறுதி, நிர்வாகம் மற்றும் மனிதவளம் என மிகவும் பலவகைப்பட்டதாக இருக்கிறது, நான் அங்கு என்ன கவனித்தேன் என்றால் மக்களிடம் ஒத்துழைப்பைக் கேட்கும் ஒவ்வொரு சமயமும் நீங்கள் நம்பிக்கையோடு இருக்கலாம். அவர்கள் உங்களுக்கு உதவிசெய்ய எப்போதுமே தயாராக இருக்கிறார்கள், ஏனென்றால் நாங்கள் அனைவரும் ஒரே இலக்கை நோக்கி பணிசெய்கிறோம்.*

*- செர்கியோ டெல் ரூசோ, இத்தாலி*

## டெலிஃப்லெக்ஸ் தொலைநோக்குப் பார்வை மருத்துவத்திற்குப் பொருத்தமான மருத்துவ கருவிகளை புதுமையான, மிகவும் நம்பப்படும் உலகளாவிய நிறுவனமாக ஆவது.

டெலிஃப்லெக்ஸ் ஊழியர்கள் உயர்ந்தமேன்மைக்காக அர்ப்பணித்துக்கொண்டவர்கள். மருத்துவர்களுக்கும், நாங்கள் சேவை செய்யும் நோயாளிகளுக்கும் நாங்களே நம்பகமான கூட்டாளிகள். கூட்டனியாக செயல்படும் எங்களின் ஒவ்வொருவரின் பங்கும் வெற்றிக்கு இன்றியமையாதது.

டெலிஃப்லெக்ஸ் தலைவர்கள் சுறுசுறுப்பாகவும் பணியிடத்தில் காணக்கூடியவர்களாகவும் இருக்கிறார்கள். அவர்கள் வெளிப்படையான தகவல்பரிமாற்றத்தையும் கூட்டணியையும் ஆதரிக்கிறார்கள், அதன் மூலம் சிறந்த கருத்துக்கள் அனைவருடைய பயன்பாட்டுக்காகவும் பகிர்ந்துகொள்ளமுடியும்.

எங்கள் பணியை பெற்றுக்கொள்ளும் இடத்தில் ஒரு நோயாளி இருக்கிறார் என்பதை அனைத்துப் பிரிவுகள், பிராந்தியங்கள் மற்றும் செயல்பாடுகளில் உள்ள சகபணியாளர்கள் மறப்பதே இல்லை, அது தவிர அந்த ஞானம் நாங்கள் நடவடிக்கை எடுப்பதற்கு எங்களுக்கு ஊக்கமளிக்கிறது.

# *கலாச்சாரம்* பகிரப்பட்ட தொலைநோக்குப் பார்வை, மதிப்பீடுகள் மூலமாக செழிக்கிறது

## அடிப்படை மதிப்பீடுகள்

மக்களை மையமாக வைத்து செயல்படும் நாங்கள் அவர்களிடம் பகிரப்பட்ட பண்புகளில் செழித்தோங்குகின்றோம். அது தவிர, இணைந்து பணிசெய்யும்போது, இந்த பண்புகள் எங்களை தனிச்சிறப்புவாய்ந்த பொருட்களையும் சேவைகளையும் உருவாக்க அனுமதிக்கிறது, இவை உலகெங்கும் உள்ள மக்களின் வாழ்விலே உண்மையிலேயே மாற்றத்தை ஏற்படுத்துகின்றன.




### தொழில்முனைவோருக்கான உணர்வு

- படைப்புத்திறனோடு இருங்கள், இடர்பாடான செயல்களில் ஈடுபடுங்கள் மற்றும் முயற்சி எடுங்கள்
- மாற்றத்தையும் புதுமையையும் தொடங்கிவையுங்கள்
- உரிமையை எடுத்துக் கொள்வதுடன் பொறுப்புள்ளவராகவும் இருங்கள்

### நம்பிக்கையை வளர்த்தல்

- நேர்மையாகவும் உண்மையாகவும் இருங்கள்
- தெரிவிக்கவும், கேட்கவும் மற்றும் கவனிக்கவும்
- ஆதரவாகவும் நம்பக்கூடியவராகவும் இருங்கள்

### இதை குதூகலமாக்குங்கள்

- உடனுழைப்பவராகவும் நட்பாகவும் இருங்கள்
- பாராட்டுதலை சிறந்த
- உங்கள் பணியிடத்தை சிறந்த இடமாக மாற்றுங்கள்

# மக்களே நாங்கள் செய்யும் அனைத்திலும் மையமாக இருக்கிறார்கள்





*”மக்கள் நட்போடு இருக்கிறார்கள்...புதிதாக வந்தபோது நான் வரவேற்கப்பட்டவராகவும் நன்கு உபசரிக்கப்பட்டவராகவும் உணர்ந்தேன்... அறிவை பகிர்ந்துகொள்ளுதலில் சகபணியாளர்கள் தாராளமாக இருக்கிறார்கள். ஒருவர் ஒரு குறிப்பிட்ட திட்டத்தில் திறமையானவராக இருப்பதால், நாங்கள் ஒருவருக்கொருவர் உதவ முன்வருபவர்களாக இருக்கிறோம்.”*

*- கிறிசன் சிம், சிங்கப்பூர்*

# மக்களே நாங்கள் செய்யும் அனைத்திலும் மையமாக இருக்கிறார்கள்




**11,000 +**
**தொழிலாளிகளின் மொத்த எண்ணிக்கை**

57% பெண்கள்
43% ஆண்கள்

**முதல் 5**
தொழிலாளிகளின் மொத்த எண்ணிக்கை

| மெக்சிக்கோ | யுஎஸ்எ | செக் | மலேசியா | ஜெர்மனி |
|---|---|---|---|---|
| 29.49% | 28.59% | 12.72% | 7.70% | 5.76% |

# தொழில் வாழ்க்கையில் டெலிஃப்லெக்சில் வெகுதூரம் செல்ல முடியும்



“தொழில்வாழ்க்கை கண்ணோட்டத்தில் பார்த்தால் அடுத்து வரக்கூடிய மூன்று முதல் ஐந்து ஆண்டுகளில் நமக்கு இருக்கும் வாய்ப்புகள் மிகப்பெரியது. என்னுடைய நிலையில் இருப்பதற்கு நான் ஆசிர்வதிக்கப்பட்டவன் ஏனென்றால் என்னால் மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என்று நான் நினைக்கிறேன்.” - உப்வான் நரங், யுஎஸ்ஏ





**நுர் அட்லீனா பிண்டி அப்துல்லா, செயல்பாட்டு மேலாளர், குலிம், மலேசியா** 25 ஆண்டுகளுக்கு மேலாக மருத்துவ கருவி நிறுவனத்தில் பணிப்புரிந்தது மட்டுமல்லாது எல் எம் எ டெலிஃப்லெக்சில் ஒரு பகுதியாக ஆவதற்கு முன்பாகவெ அங்கு மூன்று ஆண்டுகள் பணிபுரிந்து இருக்கிறார்.

ஆரம்பத்தில் ஊதியம் மற்றும் திட்டமிடலில் பங்குவகித்த பிறகு அவர் தகவல்தொடர்புக்கு பிரிவுக்குச் சென்றார், பின்னர் செயல்பாடுகளுக்குச் சென்றார், அதன் பின் தயாரிப்பு திட்டமிடல், லாஜிஸ்டிக்ஸ் மற்றும் வாடிக்கையாளர் சேவை போன்ற பதவிகளில் பணிபுரிந்தார், தொழில்வாழ்க்கை சவால்களினால் சக்திபெற்ற

நுர் அட்லினா தொடர்ந்து தனது ஆற்றலை விரிவு படுத்திக் கொண்டார். இந்த ஆண்டு தனது எம்பிஏவை நிறைவுசெய்துவிட்டு புதிய வாய்ப்புகளுக்காக திறந்தமனதோடு காத்துக்கொண்டு இருக்கிறார்.

"'இந்த பதவி தான் என் தொழில்வாழ்க்கை' என்று நான் நினைத்ததே இல்லை… புதிதாக ஏதாகிலும் வாய்ப்பு கொடுக்கப்பட்டால், நான் அதை நோக்கிச் செல்வேன்," என்று அவர் கூறினார்.



**நிகோ வோல்காராகிஸ், நாட்டு மேலாளர், பெனெலெக்ஸ், செக் குடியரசு மற்றும் ஸ்லோவாகியா** 1999 ஆம் ஆண்டு டெலிஃப்லெக்சில் இணைந்தார். இனைந்தார் அவருடைய கற்கும் முனைப்புக்கும் தனிப்பட்ட முயற்சிக்கும் அவருடைய தொழில்வாழ்க்கை ஒரு சான்று.

இவருடைய ஆரம்ப பதவியான கொள்முதலில் இருந்து, விற்பனை மற்றும் மார்கெட்டிங்கிற்கு சென்றார், பெனெலெக்ஸ் பகுதியில் விற்பனை மற்றும் மார்கெட்டிங் தலைவராக முன்னேறினார். அப்படியே, அவர் தனது மார்கெட்டிங் பட்டபடிப்பை டெலிஃப்லெக்ஸின் உதவியுடன் பெற்றார்.

புதிய பதவிகளை முயற்சிக்க ஆயத்தமாக இருக்கும் சகபணியாளர்களிடம் நிகோ இதே போன்ற தொழில்வாழ்க்கை வளர்ச்சியை பார்த்திருக்கிறார்.

"டெலிஃப்லெக்ஸ் உங்களுக்கு வாய்ப்பை கொடுக்கிறது, ஆனால் இறுதியில், அது நடக்கும்படி செய்வது உங்களிடம் இருக்கிறது," என்று அவர் கூறினார்.



**ஃபிரான்சிஸ்கோ காமச்சோ, பொறியியல் மேலாளர், நியூவோ லாரேடோ, மெக்சிகோ** தொழிற்கூடத்தில் 2004 ஆம் ஆண்டு பணியமர்த்தப்பட்ட முதல் தொழிலாளிகளில் இவரும் ஒருவர். பல ஆண்டுகளில், இவருடைய பதவியின் செயற்பரப்பு அதிகரித்துள்ளதுடன்இன்று தொழிற்கூடத்தில் உள்ள ஒட்டுமொத்த பொறியியல் துறையையும் இவர் நிர்வகிக்கிறார்.

"என்னுடைய புதிய பொறுப்புகளை கற்றுக்கொள்வதிலும், பயிற்சியிலும் என்னுடைய மேலதிகாரிகளே பல ஆண்டுகளாக முக்கிய காரணங்களாக இருந்து வந்தனர். பயிற்சியில் குறிப்பாக சிக்ஸ் சிக்மா பிளாக் பெல்ட் கூட முக்கியமானதாகவே இருந்தது," என்றார் அவர்.

நிதித்துறையில் எம்பிஏ படித்துவரும் ஃபிரான்சிஸ்கோ டெலிஃப்லெக்சில் தொடர்ந்து தனது திறன்களை பங்களிக்க நம்பிக்கையோடு இருக்கிறார்.

"நான் எதை செய்கிறேனோ அதில் மகிழ்ச்சியாக இருப்பதுடன் தொடர்ந்து வளர்வதில் நம்பிக்கையோடு இருக்கிறேன்," என்றார் அவர்.



**ஹேரீ கிரீன், கீ அக்கவுண்ட் மேனேஜர், ராலே, யுஎஸ்ஏ** தனது ஆறு ஆண்டுகள் டெலிஃப்லெக்ஸ் தொழில் வாழ்க்கையில் பல பதவிகளை வகித்துள்ளதுடன் சிறப்பு பணிகளுக்காக தொடர்ந்து அவர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

வாடிக்கையாளர் சேவை முதல் குத்தகை, அதிலிருந்து அவருடைய சமீபத்திய பதவியாகிய முக்கிய விநியோகஸ்தர்களுடன் உறவை மேலாண்மை செய்வது வரை ஹேரீ தொழில் குறித்து அதிகமாக கற்றுக்கொண்டதுடன் அதை தன்னுடைய ஒவ்வொரு புதிய பதவியிலும் செயல்படுத்தி இருக்கிறார்.

"டெலிஃப்லெக்ஸில் எனக்கு பல்வேறு விதமான அனுபவங்கள் இருக்கின்றன, அதுவே என்னுடைய வெற்றியில் பெரும் பங்கு வகிக்கின்றன," என்று அவர் கூறினார். அந்த அனுபவங்கள் நான் வளர்வதற்கு உதவியாக இருந்தது போற்றுவதற்குரியது.



**எரிக் புர்புலெஸ், மூத்த கணக்கர், வேய்ன், யுஎஸ்ஏ** புத்தம் புதிய பணியாளர் கண்ணோட்டத்தை அவருடைய குழுவுக்கு கொண்டு வருகிறார். இந்த ஆண்டு அவர் நிதி குழுவில் சேர்ந்தபோது, அவர், "நான் வளர்வதற்கு உதவக்கூடிய பெரிய நிறுவனமாகவும், உங்களுடைய தினசரி பங்களிப்பை பார்க்கக்கூடிய அளவிற்கு சிறியதாகவும் டெலிஃப்லெக்ஸ் நிறுவனம் இருப்பதைப் கண்டேன்."

புதிய கணக்கிடும் மென்பொருள் அமைப்பை செயல்படுத்தும் அணியின் ஒரு பகுதியாக தொடங்கியதில் இருந்து எரிக் தனது புதிய பணியிடத்தில் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளார்

நிறுவனத்தின் தலைமையகத்தில், "குதூகலமாக்கும்" நிகழ்ச்சிக்கும் பங்களிப்பு கொடுத்து, சமூக முயற்சிகள் மற்றும் சமுதாய நிகழ்வுகளுக்கு திட்டமிடும் தொழிலாளர் செயல்பாட்டு குழுவை உருவாக்கி வழிநடத்தினார்.



**ரஷீத் அஞ்சும், அறுவை சிகிச்சை விற்பனைகள், யுஎஸ் ஏ** பாகிஸ்தானில் இருந்து யுஎஸ்சிற்கு 1994ஆம் ஆண்டு குடிபெயர்ந்தார். 'ரா' மொழியையும் கலாச்சாரத்தையும் கற்றுக்கொண்டே ஒரு எரிவாயு மையத்தில் பணிபுரிந்தார். இரண்டு பணிகள் செய்து கொண்டே தனது கல்லூரியில் பட்டம் பெற்றதோடு தனது தொழில்வாழ்க்கை கண்ணோட்டத்தை மருத்துவ கருவி தொழிற்துறை மீது வைத்திருந்தார்.

2009 இல் அறுவை சிகிச்சை விற்பனை பிரதிநிதியாக டெலிஃப்லெக்ஸில் சேர்ந்ததில் இருந்தே, ரா விரைவான வெற்றியை கண்டார், பல்வேறு விற்பனை விருதுகளையும் அடைந்து உயர்ந்த பதவிகளுக்கு முன்னேறி இருக்கிறார், தொடர்ந்து உயர்ந்து செல்ல பேரார்வத்துடன் இருக்கிறார்.

"அவசரத்தன்மை, வாடிக்கையாளர் மரியாதை, வெற்றிபெறுவதற்கான ஆர்வம், கற்றுக்கொள்வதற்கான ஆர்வம் மற்றும் தொழில்தர்ம்ம் ஆகியவை இன்று நான் இருக்கும் நிலைக்கு என்னை மாற்றியிருக்கிறது," என்றார் அவர். "இந்த நிறுவனம் எங்கு செல்கின்றது என்பதைக் குறித்த தெளிவான தொலைநோக்குப் பார்வை எனக்கு இருக்கிறது, டெலிஃப்லெக்ஸில் எனக்கு வேலையை விட மேலானது ஒன்று இருக்கிறது என்பது மிகுந்த திருப்தி அளிக்கிறது, எனக்கு இங்கு தொழில்வாழ்க்கை இருக்கிறது."



**Alice Fan**
Marketing, USA



**Cynthia Neill**
Accounts Payable, USA



**Amanda Webb**
Regulatory Affairs, USA



**Brian Beardsley**
Marketing, USA



**Backjoon Sung**
Sales and Marketing, South Korea



**Bill Schaal**
Sales, USA



**Dunte’e Silver**
Sales Operations, USA



**Charlotte Norwood**
Marketing, UK

இந்த அறிக்கைக்கு தங்கள் கருத்துக்களை
பகிர்ந்துக் கொண்ட பணியாளர்களுக்கும்
(மற்றும் பலருக்கும்) நன்றி

*"எங்கள் தயாரிப்புகள் உண்மையிலேயே மாற்றத்தை ஏற்படுத்துகின்றன. அவை உயிர்களை காப்பதுடன் ஒரு நிறுவனமாக, ஒவ்வொரு தொழிலாளியும் மாற்றத்தை ஏற்படுத்துகின்றார். டெலிஃப்லெக்ஸின் வலிமை அதில் பணிபுரிவர்களின் வளர்ச்சியோடு நேரடியாக இணைந்திருக்கிறது."*

*- கேம் ஹிக்ஸ், துணைத் தலைவர், உலக மனித வளம்*

**Teleflex | 550 E. Swedesford Road | Wayne, PA 19087 | USA**
**www.teleflex.com**

Teleflex is a registered trademark of Teleflex Incorporated or its affiliates.
Teleflex Incorporated. All rights reserved.